**ஜனவரி – 28**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு அரசு தொழிலாளர் துறையானது, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவுப் பிறப்பித்ததைத் தொடர்ந்து, சாம்சங் இந்தியா தொழிலாளர் சங்கத்தினை (SIWU) பதிவு செய்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் தேதியன்று, ஆந்திரப் பிரதேசம் உட்பட தெற்குத் தீபகற்ப இந்தியப் பகுதியில் இருந்து வடகிழக்கு பருவக்காற்று விலகியதாக வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது.
- மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காக நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள இரண்டு மீனவக் கிராமங்களில் 39 இடங்களில் செயற்கைப் பவளப்பாறைகளை நிறுவுவதற்கு மாநில மீன்வளத் துறை திட்டமிட்டுள்ளது.
- இந்தியாவின் முதன்முதல் வகையான அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் மாபெரும் "புத்தாக்க வளாகம்" ஆனது மும்பையில் திறக்கப்பட்டுள்ளது.
- லடாக்கில் உள்ள ஷியோக் மற்றும் நுப்ரா ஆகிய பள்ளத்தாக்குகளுக்கு இடையேயான போக்குவரத்து இணைப்பை மேம்படுத்தும் வகையில் ஷியோக் நதியின் குறுக்கே முன்னதாகவே கட்டமைக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட இரண்டு புதிய பெய்லி பாலங்களை இந்திய இராணுவம் திறந்துள்ளது.
- வக்ஃப் திருத்த மசோதா மீதான பாராளுமன்றக் கூட்டு குழு (JPC) ஆனது, அதன் உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட 14 திருத்தங்களை உள்ளடக்கிய ஒருவரைவுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஈர நிலங்கள் குறித்த ராம்சர் உடன்படிக்கையின் கீழ் அங்கீகாரம் பெற்ற ஈர நில நகரங்களின் உலகளாவியப் பட்டியலில் இந்தூர் (மத்தியப் பிரதேசம்) மற்றும் உதய்பூர் (ராஜஸ்தான்) ஆகியவை இந்தியாவின் முதல் இரண்டு நகரங்களாக அதில் அங்கீகாரம் பெற்றுள்ளன.
- இந்தியக் கிராண்ட்மாஸ்டர் இனியன் பன்னீர்செல்வம் (தமிழ்நாட்டின் ஈரோட்டினைச் சேர்ந்தவர்), மலேசியாவில் நடைபெற்ற 9வது ஜோகூர் சர்வதேச ஓபன் செஸ் சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் தனது மகத்தான பங்கேற்பினை வெளிப்படுத்தி உள்ளார்.
- இத்தாலியின் ஜானிக் சின்னர் ஜெர்மனியின் அலெக்ஸ்சாண்டர் வெர்வ் என்பவரை வீழ்த்தி, தொடர்ந்து இரண்டாம் முறையாக ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் சாம்பியன் ஷிப் பட்டத்தினையும், ஒட்டு மொத்தமாக 3வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தினையும் வென்றுள்ளார்.
- தூய்மை எரிசக்திக்கு முறையான மற்றும் உள்ளடக்கிய வகையிலான ஒரு பெரும் மாற்றத்திற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காகவும், அதற்கான பல்வேறு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காகவும் ஜனவரி 26 ஆம் தேதியன்று சர்வதேச தூய்மை எரிசக்தி தினம் ஆனது அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## குடியரசு தின விருதுகள் 2025

- தமிழ்நாடு முதல்வர் பல்வேறு விருதுகளை வெற்றியாளர்களுக்கு வழங்கினார்.
- சென்னை அடையாறு நதி நீரில் மூழ்கிய மூன்று பேரை மீட்டத் தீயணைப்பு வீரர் K.

வெற்றிவேல், 2025 ஆம் ஆண்டிற்கான வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கத்தைப் பெற்றார்.

- இதுவரை 1,000க்கும் மேற்பட்ட உடல்களை நல்லடக்கம் செய்வதில் உதவிய இராமநாத புரம் மாவட்டத்தைச் சேர்ந்த S.A. அமீர் அம்சா, 2025 ஆம் ஆண்டிற்கான கோட்டை அமீர் விருதைப் பெற்றார்.
- தேனி மாவட்டத்தைச் சேர்ந்த R. முருகவேல், நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறன் விருதைப் பெற்றார்.
- காவல் ஆய்வாளர் P. சின்னகாமணன், தலைமைக் காவலர்கள் K. மகா மார்க்ஸ் மற்றும் K. கார்த்திக், இரண்டாம் நிலை காவலர்கள் K. சிவா மற்றும் P. பூமாலை ஆகியோர் காந்தி அடிகள் காவல் பதக்கங்களைப் பெற்றனர்.
- மாநிலத்தின் சிறந்தக் காவல் நிலையங்களுக்கான முதல்வரின் கோப்பைகள்: மதுரை நகரம் (முதலாவது) திருப்பூர் நகரம் (இரண்டாமிடம்) மற்றும் திருவள்ளூர் மாவட்டம் (மூன்றாம்மிடம்).





# தேசியச் செய்திகள்

## ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தின் அமலாக்கம்

- ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்திற்கான (UPS) அரசிதழ் அறிவிப்பினை மத்திய அரசு அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது.
- இந்தத் திட்டம் ஆனது 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளது.
- இது பழைய ஓய்வூதியத் திட்டம் (OPS) மற்றும் தேசிய ஓய்வூதியத் திட்டம் (NPS) ஆகியவற்றுக்கு இடையே ஒரு சமநிலையை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இது அரசு ஊழியர்களுக்கு ஓய்வுக்குப் பிறகு அவர்களின் நிதிப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உத்தரவாதமான ஓய்வூதியங்களை வழங்கும்.
- தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் (NPS) கீழ் உள்ள மற்றும் UPS தெரிவினைத் தேர்ந்து எடுக்கும் மத்திய அரசு ஊழியர்களுக்கு மட்டுமே UPS பொருந்தும்.
- UPS திட்டத்தின் கீழ், 25 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் அரசுப் பணியாற்றிய ஊழியர்கள், கடந்த 12 மாதங்களில் அவர்கள் பெற்ற சராசரி அடிப்படை ஊதியத்தில்

50% உத்தரவாதமான ஓய்வூதியத்தைப் பெறுவர்.

- 25 ஆண்டுகளுக்கும் குறைவான ஆண்டுகள் பணியாற்றிய ஊழியர்கள் விகிதாசார அடிப்படையிலான ஓய்வூதியத்தைப் பெறுவர்.
- குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் என்ற தகுதிக் காலத்திற்குப் பணியாற்றிய ஊழியர்கள் மாதத்திற்கு 10,000 ரூபாய் என்ற உத்தரவாதமான ஓய்வூதியத்தைப் பெறுவர்.




## SANJAY போர்க்களக் கண்காணிப்பு அமைப்பு




- மத்திய அரசானது, இந்திய இராணுவத்தில் சேர்க்கப்பட உள்ள 'SANJAY' எனப்படும் ஒரு போர்க்களக் கண்காணிப்பு அமைப்பினை (BSS) கொடியசைத்து தொடங்கி வைத்தது.

- SANJAY என்பது அனைத்து நிலவழி மற்றும் வான்வழி வகையான போர்க்கள உணர்விக் கருவிகளிலிருந்துப் பெறப்படும் உள்ளீடுகளை ஒருங்கிணைக்கும் ஒரு தானியங்கி அமைப்பாகும்.
- இது அவற்றின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த என அவற்றைச் செயல்முறைப் படுத்தி, அதன் போலியாக்கத்தினைத் தடுத்து, ஒரு பாதுகாப்பான இராணுவத் தரவு வலையமைப்பு மற்றும் செயற்கைக்கோள் தொடர்பு வலையமைப்பு மூலம் போர்க் களத்தின் பொதுவான கண்காணிப்புத் தகவலை உருவாக்குவதற்காக என அவற்றை ஒருங்கிணைக்கிறது.
- இது போர்க்கள வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தும் மற்றும் மையப்படுத்தப் பட்ட வலையமைப்பு செயல்பாட்டு அமைப்பு மூலம் எதிர்கால நுட்பத்திலான போர்க் களத்தினை உருவாக்கும்.

## இந்தியாவின் முதல் சிறு நிதிநிலையறிக்கை





- நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், பிப்ரவரி 01 ஆம் தேதியன்று மத்திய அரசின் நிதி நிலை அறிக்கையினை தாக்கல் செய்ய உள்ளார் என்ற நிலையில் அவர் தொடர்ந்து தாக்கல் செய்யும் எட்டாவது நிதிநிலை அறிக்கையினை இது குறிக்கிறது.
- 'சிறு நிதிநிலையறிக்கை' என்பது ஒரு சிறப்பு நிதிநிலை அறிக்கை தாக்கலாகும்.
- ஒரு தேர்தல் ஆண்டில், பதவிக் காலம் முடிய உள்ள ஒரு அரசாங்கத்தினால் ஏற்கனவே இடைக்கால நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அதே ஆண்டில் புதியதொரு அரசாங்கம் மற்றொரு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்க உள்ள சூழலின் போது இது தாக்கல் செய்யப்படுகிறது.
- இந்தியாவின் வரலாற்றில் முதல் சிறு நிதிநிலை அறிக்கையானது 1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் தேதியன்று இந்தியாவின் நான்காவது நிதியமைச்சர் T.T. கிருஷ்ணமாச்சாரி அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது.
- பத்தாண்டுகளுக்குப் பிறகு, 1965 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இரண்டாவது சிறு நிதிநிலை அறிக்கையினையும் அவரே தாக்கல் செய்தார்.

# சர்வதேசச் செய்திகள்


## 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய அந்நிய நேரடி முதலீடு சரிவு

- உலகளாவிய அந்நிய நேரடி முதலீடுகள் (FDI) ஆனது 2024 ஆம் ஆண்டில் எட்டு சதவீதம் குறைந்தன.

- ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு (UNCTAD) அமைப்பானது இந்த மதிப்பீட்டை வெளியிட்டது.
- வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் FDI 2% குறைந்துள்ளது.
- நிலையான மேம்பாட்டு இலக்குகளுடன் தொடர்புடைய FDI ஆனது 2024 ஆம் ஆண்டில் 11% குறைந்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டு சரிவுப் போக்கைத் தொடர்ந்து சீனாவில் FDI 29% குறைந்துள்ளது.
- ஆனால் எண்ணிக்கையிலும் ஒட்டுமொத்த மதிப்பிலுமான ஒரு பெரும் அதிகரிப்புடன் இந்தியாவின் FDI ஆனது 13% உயர்வைக் கண்டது.
- ASEAN அமைப்பின் நாடுகளின் FDI 2% மட்டுமே அதிகரித்தன.




## தாய்லாந்து - திருமணச் சமத்துவச் சட்டம்




- தாய்லாந்தின் சட்டக் கட்டமைப்பு ஆனது, தன்பாலினத் திருமணத்தினை அதிகாரப் பூர்வமாகச் சட்டப்பூர்வமாக்கியுள்ளது.
- திருமணச் சமத்துவச் சட்டம் ஆனது, "ஆண்," "பெண்," "கணவன்," மற்றும் "மனைவி"


போன்ற பாலினங்களைக் குறிப்பிடும் சொற்களை "தனிநபர்" மற்றும் "துணைவர்" போன்ற உள்ளார்ந்த பொருள் கொண்ட சொற்களாக மாற்றியுள்ளது.

- இது தன்பாலின இணையர்களுக்கு இடையேயான ஒரு திருமணத்தினால் பெறப்பட்ட சொத்துக்களின் சமமான பிரிவினை மற்றும் உரிமையை உறுதி செய்கிறது.
- இது தன்பாலின வாழ்க்கைத் துணைவர்களுக்குப் பிரிவினை அல்லது விவாகரத்து வழக்குகளில் நிதி உதவி கோரும் உரிமையை வழங்குகிறது.
- தன்பாலினத் திருமணத்தினைச் சட்டப் பூர்வமாக்கிய முதல் ஆசிய நாடு தைவான் (2017) ஆகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் எண்ணிமப் பொருளாதாரம் 2024-25

- இந்தியாவின் எண்ணிமப் பொருளாதாரம் ஆனது, நாட்டின் மற்ற பொருளாதாரத் துறைகளை விட இரண்டு மடங்கு வேகமாக வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இது 2024–25 ஆம் ஆண்டின் இறுதியில் தேசிய வருமானத்தில் சுமார் 13.42% பங்கினைக் கொண்டிருந்தது என்பதோடு இது 2022–23 ஆம் ஆண்டில் 11.74% ஆக இருந்தது.
- சர்வதேசப் பொருளாதார உறவுகள் குறித்த இந்திய ஆராய்ச்சிச் சபை (ICRIER) ஆனது இந்த அறிக்கையினைத் தயாரித்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள், இந்தியாவின் எண்ணிமப் பொருளாதாரமானது ஒட்டு மொத்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் ஐந்தில் ஒரு பங்கைக் கொண்டிருக்கும்.
- 2022–23 ஆம் ஆண்டில் எண்ணிமப் பொருளாதாரம் (GVA) ஆனது, மொத்த மதிப்புக் கூட்டலில் 28.94 லட்சம் கோடி ரூபாய்க்கும் (~368 பில்லியன் டாலர்) மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 31.64 லட்சம் கோடி ரூபாய்க்கும் (~402 பில்லியன் டாலர்) சமமானதாக இருந்தது.





## இந்தியாவில் காபி உற்பத்தி 2023-24


- 2023-24 ஆம் நிதியாண்டில் ஏற்றுமதி 1.29 பில்லியன் டாலர் மதிப்பினை எட்டியுள்ள

நிலையில், உலகின் ஏழாவது பெரிய காபி உற்பத்தியாளராக இந்தியா உருவெடுத்து உள்ளது.

- இது 2020-21 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 719.42 மில்லியன் டாலர் மதிப்பினை விட சுமார் இரு மடங்கு அதிகமாகும்.
- உள்நாட்டு நுகர்வு ஆனது 2012 ஆம் ஆண்டில் 84,000 டன்னாக இருந்தது என்ற நிலையில் இது 2023 ஆம் ஆண்டில் 91,000 டன்னாக அதிகரித்துள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் 248,020 மில்லியன் டன் பங்குடன் காபி உற்பத்தியில் கர்நாடகா முன்னணியில் உள்ள ஒரு நிலையில் அதைத் தொடர்ந்து கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகியவை இடம் பெற்றுள்ளன.




## நிதிச் சேவைகளின் சிறு தொகுப்புத் திட்டம்




- இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் ஆனது, பரஸ்பர நிதிகளின் சிறு

தொகுப்பு ('சேச்சிடேஷன்') குறித்த ஆலோசனைக் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

- இது குறைந்த வருமானம் கொண்ட பிரிவினரும் பரஸ்பர நிதிகளை அணுகுவதை அதிகரிப்பதையும் அவர்களின் பங்கேற்பை மிக எளிதாக்குவதையும் நோக்கமாகக் கொண்ட ள்ளது.
- SEBI வாரியமானது, சுமார் 250 ரூபாய் மதிப்பிலான சிறு முதலீடு சார்ந்த முறைசார் முதலீட்டுத் திட்டம் (SIP) என்ற ஒரு சிறு தொகுப்பு பரஸ்பர நிதித் தயாரிப்பை முன் மொழிந்துள்ளது.
- மேலும், கடன் பத்திரங்கள், துறைசார் மற்றும் குறிப்பிட்ட துறை சார்ந்தத் திட்டங்கள், பங்கு சார் திட்டப் பிரிவின் கீழான சிறிய மற்றும் நடுத்தர வரம்புத் திட்டங்கள் தவிர வேறு எந்த திட்டத்திலும் சிறு முதலீடு SIP சேவைகளை வழங்க முடியும்.
- பரஸ்பர நிதிகளின் சிறு தொகுப்பானது, பரஸ்பர நிதிகளில் படிப்படியாக மிகச் சிறிய தொகை சார்ந்த முதலீட்டை செயல்படுத்தும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## வீரதீர விருதுகள் 2025




- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், 12 பேருக்கு அவர்களின் மறைவிற்குப் பின்னதாக வழங்கப்பட்ட விருதுகள் உட்பட ஆயுதப்படைகள் மற்றும் மத்திய ஆயுதக் காவல் படை வீரர்கள் 93 பேருக்கு வீரதீர விருதுகளை வழங்கினார்.
- இவற்றில் மரணத்திற்குப் பின் வழங்கப்பட்ட ஒரு விருது உட்பட இரண்டு கீர்த்தி சக்ரா விருதுகள்; மரணத்திற்குப் பின் வழங்கப்பட்ட மூன்று விருதுகள் உட்பட 14 சௌர்ய சக்ரா விருதுகள், ஒரு துணை சேனா பதக்கம் (வீரதீரச் செயல்); மரணத்திற்குப் பின் வழங்கப்பட்ட ஏழு விருதுகள் உட்பட 66 சேனா பதக்கங்கள்; இரண்டு நவோ சேனா பதக்கம் (வீரதீரச் செயல்) மற்றும் மரணத்திற்குப் பின் வழங்கப்பட்ட ஒரு விருது உட்பட எட்டு வாயு சேனா பதக்கங்கள் (வீரதீரச் செயல்) அடங்கும்.
- ஆயுதப் படைகள் மற்றும் பிற துறைப் பணியாளர்களுக்கு வேண்டி 305 பாதுகாப்பு விருதுகளையும் குடியரசுத் தலைவர் அவர்கள் வழங்கினார்.
- இவற்றில் 30 பரம் விஷிஷ்ட் சேவா பதக்கங்கள்; ஐந்து உத்தம் யுத் சேவா பதக்கங்கள்; 57 அதி விஷிஷ்ட் சேவா பதக்கங்கள்; 10 யுத் சேவா பதக்கங்கள்; சேனா பதக்கத்திற்கு இணையான பதக்கம் (கடமைப்பற்று); 43 சேனா பதக்கங்கள் (கடமைப்பற்று); எட்டு நவோ சேனா பதக்கங்கள் (கடமைப்பற்று); 15 வாயு சேனா பதக்கங்கள் (கடமைப் பற்று); நான்கு விஷிஷ்ட் சேவா பதக்கம் மற்றும் 132 விஷிஷ்ட் சேவா பதக்கங்களை குடியரசுத் தலைவர் அவர்கள் வழங்கினார்.

- மேலும், எட்டு கடலோரக் காவல்படை வீரர்களுக்கு குடியரசுத் தலைவரின் தத்ரக்சக் பதக்கம் மற்றும் தத்ரக்சக் பதக்கத்தினையும் குடியரசுத் தலைவர் அவர்கள் வழங்கச் செய்தானார்.
- குடியரசுத் தலைவரின் பதக்கப் பட்டியலில் தமிழக காவல்துறையின் 21 காவல்துறை அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர்.
- ஊர்க்காவல் மற்றும் குடிமைப் பாதுகாப்பு பிரிவின் கீழ், தமிழ்நாடு ஊர்க் காவல் படையின் உதவித் தலைவர் மஞ்சித் சிங் நாயர், மகத்தான சேவைக்கான குடியரசுத் தலைவர் பதக்கத்தைப் பெற்றார்.

### டாக்டர் K.M.செரியன்

- இருதய அறுவை சிகிச்சையின் முன்னோடி டாக்டர் K.M.செரியன் சமீபத்தில் காலம் ஆனார்.
- அவர் 1975 ஆம் ஆண்டில் நாட்டின் முதல் இருதய இரத்த ஓட்ட திசை திருப்பல் அறுவை சிகிச்சையினை மேற்கொண்டார்.
- அவர் இருதய நோய்களை, மிகவும் குறிப்பாக பல்வேறு குறைபாடுகளுடன் பிறந்தக் குழந்தைகளில் கண்டுபிடித்துக் குணப்படுத்தியவராவார்.
- 1990 மற்றும் 1993 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இந்தியக் குடியரசுத் தலைவரின் கௌரவ அறுவை சிகிச்சை நிபுணராக இருந்தார்.
- அவருக்கு 1991 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.
- கேரளாவின் காயம்குளம் என்ற ஊரில் பிறந்த இவர் பெங்களூருவில் மறைந்தார்.




## விளையாட்டு செய்திகள்

### ICC அமைப்பின் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர்கள் 2024

- சர்வதேச கிரிக்கெட் சபையின் 2024 ஆம் ஆண்டிற்கான மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் சிறந்த வீராங்கனையாக ஸ்மிருதி மந்தனா அறிவிக்கப்பட்டுள்ளார்.
- ICC ஆடவர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 2024 ஆம் ஆண்டின் மிகச் சிறந்த வீரராக ஜஸ்பிரித் பும்ரா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- ICC ஆடவர் T20I போட்டிகளில் 2024 ஆம் ஆண்டின் சிறந்த அணித் தலைவராக ரோஹித் சர்மா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ICC ஆடவர் T20I போட்டிகளில் 2024 ஆம் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதை அர்ஷ்தீப் சிங் வென்றுள்ளார்.
- ICC மகளிர் T20I போட்டிகளில் 2024 ஆம் ஆண்டின் சிறந்த வீராங்கனையாக அமெலியா கெர் (நியூசிலாந்து) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ICC ஆடவர் T20 போட்டிகளில் 2024 ஆம் ஆண்டின் சிறந்த அணியில் அர்ஷ்தீப் சிங் ஜஸ்பிரித் பும்ரா, ஹர்திக் பாண்டியா மற்றும் ரோஹித் சர்மா ஆகியோர் இடம் பெற்று உள்ளனர்.
- ICC மகளிர் T20 போட்டிகளில் 2024 ஆம் ஆண்டின் சிறந்த அணியில் ஸ்மிருதி மந்தனா, ரிச்சா கோஷ் மற்றும் தீப்தி சர்மா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.
- ஆப்கானிஸ்தான் நாட்டினைச் சேர்ந்த, மேலும் அந்த நாட்டிலிருந்து முதல்முறையாக, அசமதுல்லா ஓமராசி என்பவருக்கு 2024 ஆம் ஆண்டின் ICC ஆடவர் T20 ஒரு நாள் போட்டிகளின் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருது வழங்கப் பட்டது.




# முக்கிய தினங்கள்


## சர்வதேச சுங்க தினம் - ஜனவரி 26

- பாதுகாப்பு, வர்த்தக இணக்கம் மற்றும் கடத்தல் எதிர்ப்பு மீதான சாதனைகளில் சுங்க அதிகாரிகளின் பங்கைக் கொண்டாடுவதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- தற்போது உலக சுங்க அமைப்பு (WCO) என்று அழைக்கப்படும் சுங்க ஒத்துழைப்பு சபை (CCC) ஆனது, 1952 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- அதன் முதல் அமர்வானது 1953 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதியன்று பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸ் நகரில் 17 உறுப்பினர் நாடுகளின் பங்கேற்புடன் நடைபெற்றது.
- தற்போது, WCO ஆனது உலக வர்த்தகத்தில் உலகின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் சுமார் 98 சதவீதத்தைக் கையாளும் 183 உறுப்பினர் நாடுகளைக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Customs Delivering on its Commitment

to Efficiency, Security and Prosperity” என்பதாகும்.




## சர்வதேச இன அழிப்பு நிகழ்வின் நினைவு தினம் - ஜனவரி 27




- இது இன அழிப்புக் கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்களின் நினைவாக சர்வதேச நினைவு தினம் என்றும் அழைக்கப்படுகிறது.
- 1945 ஆம் ஆண்டில் ஆஷ்விட்ஸ்-பிர்கெனாவ் நாஜி வதை மற்றும் அழிப்பு முகாமில் சிக்கியிருந்தவர்களின் விடுதலையைக் குறிக்கும் வகையில் இந்த நாளை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை தேர்வு செய்தது.
- 2025 ஆம் ஆண்டானது இரண்டாம் உலகப் போர் மற்றும் இன அழிப்புக் கொடுமை நிகழ்வு முடிவடைந்து 80 ஆண்டுகள் நிறைவைக் குறிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Holocaust Remembrance for Dignity and Human Rights" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## கேரளப் பழங்குடி மன்னர்

- கேரளாவின் இடுக்கியைச் சேர்ந்த பழங்குடி மன்னர் இராமன் இராஜமன்னன் மற்றும் அவரது மனைவி பினுமோல் ஆகியோர் புது டெல்லியில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு

குடியரசு தின விழாவில் கலந்து கொண்டனர்.

- இடுக்கியில் உள்ள 48 பட்டியலிடப்பட்ட பழங்குடியின கிராமங்களில் சுமார் 300க்கும் மேற்பட்ட மன்னன் சமூகக் குடும்பங்கள் உள்ளன.
- அவர்களின் சடங்குகளில் மன்னருக்கு ஒரு சிறப்பு இடம் உண்டு.
- அரசக் குடும்பங்களிலிருந்து, பாரம்பரியத் தாய்வழி மரபுரிமை முறையின்படி அவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- அரசருக்குச் சமூகத்தில் எந்தக் குடிமை உரிமைகளும் கடமைகளும் இல்லை, ஆனால் நான்கு உப ராஜாக்கள் (பிரதிநிதிகள்), ஒரு இளையராஜா (இளவரசர்) மற்றும் கானிகள் என்று அழைக்கப்படும் 50 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அமைச்சர்கள் குழுவின் உதவியுடன் சமூகத்தின் விவகாரங்களை அவர் மேற்பார்வையிடுகிறார்.



## சர்த் ஹவா நடவடிக்கை 2025




- எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) ஆனது, ஜெய்சால்மரில் பாகிஸ்தாந நாட்டுடனான எல்லைப் பகுதியில் ஊடுருவல் முயற்சிகளைத் தடுப்பதற்காக என்று கண்காணிப்பை அதிகரித்துள்ளது.
- குளிர்காலத்தில் மூடுபனியால் ஏற்படும் குறைவான புலப்படும் தன்மை காரணமாக நிகழும் ஊடுருவல் முயற்சிகளைத் தடுப்பதே இந்தச் சிறப்புப் பயிற்சியின் நோக்கம் ஆகும்.
- வழக்கமாக, BSF ஆனது கோடையில் 'கரம் ஹவா நடவடிக்கை' மற்றும் குளிர்காலத்தில் 'சர்த் ஹவா நடவடிக்கை' ஆகியவற்றை நடத்துகிறது.

- மறுபுறம், BSF ஆனது இந்திய-வங்காளதேச எல்லையில் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தடை செய்யப் பட்ட இருமல் நிவாரணி மருந்துகள் அடங்கிய மூன்று நிலத்தடி இரும்புப் பதுங்கு குழிகளைக் கண்டுபிடித்துள்ளது.
- இந்தப் பதுங்கு குழிக்குள் சுமார் 1.41 கோடி ரூபாய் மதிப்புள்ள 62,200 குடுவைகள் பென்செடைல் மருந்து கண்டுபிடிக்கப்பட்டது.
- கோடீனை அடிப்படையாகக் கொண்ட இருமல் நிவாரணி மருந்தான பென்செடைல், வங்காள தேசத்தில் தடை செய்யப்பட்டுள்ளது, ஆனால் அங்குள்ள மிக அதிகத் தேவை காரணமாக பெரும்பாலும் அது இந்தியாவிலிருந்து கடத்தப்படுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★